

ஊடக அறிக்கை 1: வறுமை

# புதிதாக வறுமைக்கு உள்ளானோர் : கடந்த 4 வருடங்களில் 4 மில்லியன் இலங்கை மக்கள் புதிதாக வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்

(கொழும்பு, 7 ஜூன் 2023)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொகை 4 மில்லியன்களால் அதிகரித்துள்ளதென, அண்மையில் LIRNEasia என்ற பிராந்திய சிந்தனைக் குழு முன்னெடுத்த **தேசிய ரீதியாக பிரதிநிதித்துவ படுத்த கூடிய கணக்கெடுப்பு ஆய்வில்** தெரியவந்துள்ளது. 2019ஆம் ஆண்டு வறுமைக்கோட்டின் கீழ் 3 மில்லியன் மக்கள் காணப்பட்ட நிலையில், இப்போது (2023ஆம் ஆண்டு) 7 மில்லியன் இலங்கையர்கள் (மொத்த சனத்தொகையில் 31வீதம்) வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.








மூலம்: LIRNEasia (2023)

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தொகையில் 81 வீதமானோர் கிராமப்புறங்களில் வசிப்பதாக 2023ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. எனினும், 2019ஆம் **ஆண்டோடு ஒப்பிடும் போது** கிராமப்புறங்களில் வறுமை நிலை இருமடங்காகியுள்ளதோடு, (15 வீதத்திலிருந்து 32 வீதத்திற்கு) நகர்ப்புற வறுமை மும்மடங்காகவும் (6 வீதத்திலிருந்து 18 வீதத்திற்கு) அதிகரித்துள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களே மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்த சமூகத்தைச் சேர்ந்த அரைவாசிக்கும் மேற்பட்டோர் வறுமையில் வாழ்கின்றனர்.

இதற்கிடையில், தற்போது காணப்படும் சமூகநலத் திட்டங்கள் சமூகத்திலுள்ள ஏழை மக்களை சென்றடைய தவறிவிட்டதாகவும் கணக்கெடுப்பு சுட்டிக்காட்டுகின்றது. **வறுமையில் அடிமட்டதில் வாழும் கடைசி பத்து வீதமாக வீடுகளில் வெறும் 31% வீடுகளே சமுர்த்தி நல திட்டத்தை பெறும் அதேவேளை முதல் பத்து வீதமான வசதி படைத்த பணக்கார வீடுகளிலும் கூட 4% ஆன**

## மக்கள் சமுர்த்தி நல திட்டத்தை பெறுகிறார்கள்




LIRNEasiaவின் ஏற்பாட்டில் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் இந்த ஆய்வுத்தரவுகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ ஷெஹான் சேமசிங்க பிரதான உரையை நிகழ்த்தினார். திரு. பி. விஜயரத்ன (தலைவர், நலன்புரி நலன்கள் சபை), கரின் பெர்னாண்டோ (குழுத் தலைவர் - நிலையான அபிவிருத்தி, CEPA), கயானி ஹுருல்லே (சிரேஷ்ட ஆய்வு முகாமையாளர், LIRNEasia), மற்றும் தாரக அமரசிங்க (புள்ளிவிபர நிபுணர், LIRNEasia) ஆகியோரின் பங்குபற்றுதலுடன் குழுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனை தனநாத் பெர்னாண்டோ (CEO, Advocata Institute) நெறிப்படுத்தினார்.

“இந்தளவு குறுகிய காலத்திற்குள் மேலும் 4 மில்லியன் இலங்கை மக்கள் வறுமை நிலைக்கு உள்ளாகியுள்ளமை கவலையளிக்கின்றது. ஒரு குழந்தையை விட இன்னொரு குழந்தையின் கல்விக்கு குடும்பங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. ஆரோக்கியமானதும் சரியான அளவிலும் குழந்தைகளுக்கு உணவளிக்க முடியாமல் உள்ளதாக, நாம் சந்தித்த பெற்றோர்கள் குறிப்பிட்டனர். இந்த சவாலான காலப்பகுதியில், குடும்பங்களை பாதுகாக்கும் சமூக பாதுகாப்பு திட்டங்களின் ஊடாக போதுமானளவு செலவு செய்து, பாதிப்பினை எதிர்கொள்ளும் மக்களை நாடு பாதுகாக்க வேண்டும். சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கு போதுமானளவு நிதியொதுக்கீடு செய்வது மாத்திரமன்றி, குறித்த நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்துவது அவசியமாகும்” என LIRNEasiaவைச் சேர்ந்த கயனி ஹுருல்லே தெரிவித்தார்.

## ஆய்வு பற்றிய விளக்கம்

10,000இற்கும் மேற்பட்ட இலங்கை குடும்பங்களின் **தேசிய ரீதியாக பிரதிநிதித்துவ படுத்த கூடிய மாதிரியை** அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, 400 கிராமசேவகர் பிரிவுகளில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. +/-1.4%

என்ற அளவிலேயே பிழை ஏற்படலாம் என்ற 95 வீத நம்பிக்கை இடைவெளியில் **இந்த ஆய்வின் தேசிய மதிப்பீடுகள் செய்யப்பட்டு உள்ளன** . இதற்கு மேலதிகமாக, 13 மாவட்டங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்டோருடன், முக்கிய தகவல்களை வழங்கக்கூடியவர்களுடனான நேர்காணல்கள், குழுக் கலந்துரையாடல்கள், விரிவான நேர்காணல்கள் மற்றும் அமைப்பியல் ரீதியான கண்காணிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியவாறு ஒரு தரமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கனடாவின் ஒட்டாவாவில் உள்ள சர்வதேச அபிவிருத்தி ஆய்வு நிலையத்தின் உதவித்திட்டத்தின் கீழ் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

## LIRNEasia பற்றிய விளக்கம்

ஆசிய பசுபிக் வலயம் முழுவதும் செயற்படும் ஒரு கொள்கை ரீதியான சிந்தனைக் குழுவே LIRNEasia ஆகும். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஆய்வு மூலம் கொள்கை மாற்றத்தை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

**மேலதிக தகவல்களுக்கு - கயனி ஹுருல்லே** (சிரேஷ்ட ஆய்வு முகாமையாளர், LIRNEasia) gayani@lirneasia.net அல்லது (+94) 77 333 9727.

LIRNEasia
Pro-poor. Pro-market.

ஊடக அறிக்கை 2: உணவு பாதுகாப்பு


# இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக, 33 வீதமானோர் குறைந்தளவான உணவை உட்கொண்டுள்ளனர்.

(கொழும்பு, 7 ஜூன் 2023)

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையின் 33 வீதமான குடும்பங்கள், இந்த கணக்கெடுப்பை நடத்துவதற்கு முன்னரான 7 நாட்களில் தமது உணவு பயன்பாட்டை குறைத்துள்ளனர் என்ற கவலைதரும் விடயத்தை, பிராந்திய சிந்தனைக் குழுவான LIRNEasia அண்மையில் முன்னெடுத்த **தேசிய ரீதியாக பிரதிநிதித்துவ படுத்த கூடிய கணக்கெடுப்பு ஆய்வில்** சுட்டிக்காட்டியுள்ளது.

**உணவு தொடர்பான சமாளிப்பு மூலோபாயங்கள் – கணக்கெடுப்பிற்கு 7 நாட்களுக்கு முன்னர் (குடும்பங்களின் சதவீதம்)**

12




மூலம்: LIRNEasia (2023)

27 வீதமான குடும்பங்களில், தமது குழந்தைகள் சாப்பிட வேண்டும் என்பதற்காக பெரியவர்கள் தாம் உணவு உட்கொள்ளும் அளவினை கட்டுப்படுத்திக்கொண்டனர். நுவரெலியாவைச் சேர்ந்த 37 வயதான தர்ஷனி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) எம்மிடம் கருத்துப் பகிர்ந்துகொண்டார். அவரது கணவர் ஒரு சாதாரண தொழிலாளி. “இரண்டு நாட்களுக்கு முன்னர் **நல்ல சூழ்நிலையும்** , **நல்ல வெயிலான காலநிலையும்** காணப்பட்டது. எனினும், எனது கணவருக்கு போதியளவு வேலை கிடைக்கவில்லை. அவர் வேலை தேடி எங்கும் அலைந்து (நகர்ப்புறத்தில் வேலை தேடி), மாலையில் குறைந்தளவு பணத்துடன் வீட்டிற்கு வந்தார். அந்தப் பணத்தில் குழந்தைகளுக்கு சிறிது உணவை தயாரித்தேன். நான் பசியுடன் இருந்தேன். இவ்வாறு எத்தனையோ நாட்கள் சாப்பிடாமல் பட்டினி கிடந்துள்ளேன். எனினும், நான் சாப்பிடவில்லை என்பதை எனது குடும்பத்தாருக்கு வெளிப்படுத்த மாட்டேன்” என்றார்.

மேலும், உணவுத் தேவைக்காக 37 வீதமானோர் தமது சொத்துக்களை விற்பனை செய்துள்ளனர். அதே **போல**, 50 வீதமானோர் தமது சேமிப்பை இதற்காக பயன்படுத்தியுள்ளனர். கண்டியைச் சேர்ந்த 36 வயதான ரஞ்சினி (பெயர்

மாற்றப்பட்டுள்ளது) என்ற தாயார், தனது குடும்பத்திற்கு உணவளிக்க போதுமான பணம் இல்லாத காரணத்தினால் தனது நகையை அடகு வைத்ததாக ஆய்வாளர்களிடம் கூறியுள்ளார்.

LIRNEasiaவின் ஏற்பாட்டில் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் இந்த ஆய்வுத்தரவுகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ ஷெஹான் சேமசிங்க பிரதான உரையை நிகழ்த்தினார். திரு. பி. விஜயரத்ன (தலைவர், நலன்புரி நலன்கள் சபை), கரின் பெர்னாண்டோ (குழுத் தலைவர் - நிலையான அபிவிருத்தி, CEPA), **கயனி ஹுருல்லே** (சிரேஷ்ட ஆய்வு முகாமையாளர், LIRNEasia), மற்றும் தாரக அமரசிங்க (புள்ளிவிபர நிபுணர், LIRNEasia) ஆகியோரின் பங்குபற்றுதலுடன் குழுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனை தனநாத் பெர்னாண்டோ (CEO, Advocata Institute) நெறிப்படுத்தினார்.

“7 மில்லியன் இலங்கை மக்களை வறுமை நிலைக்குத் தள்ளியுள்ள இந்த பொருளாதார நெருக்கடி மிகவும் கடுமையானது. உணவைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் எந்தளவு சிரமங்களை கடக்கவேண்டி ஏற்பட்டிருந்தது என்பதை எமது ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. புரத உணவினை முழுவதுமாக கைவிட்ட மற்றும் பெரும்பாலான நாட்களில் **காய்கறிகளை கூட வாங்கமுடியாத** நபர்களை நாம் சந்தித்தோம். அவர்கள் அரிசி மற்றும் பருப்பு சேர்த்த உணவை மாத்திரம் உண்டு வாழ்கின்றனர். எமது சமூக பாதுகாப்புத் திட்டங்களை நாம் தொடர்ச்சியாக சீர்திருத்துவது அவசியம். அவ்வாறு செய்யும் பட்சத்தில் அவை **பெருமளவில் பாதிப்பை** எதிர்கொள்ளும் மக்களை சென்றடையும்” என LIRNEasiaவைச் சேர்ந்த தாரக அமரசிங்க குறிப்பிட்டார்.

## ஆய்வு பற்றிய விளக்கம்

10,000இற்கும் மேற்பட்ட இலங்கை குடும்பங்களின் **தேசிய ரீதியாக பிரதிநிதித்துவ படுத்த கூடிய மாதிரியை** அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, 400 கிராமசேவகர் பிரிவுகளில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. +/-1.4% என்ற அளவிலேயே பிழை ஏற்படலாம் என்ற 95 வீத நம்பிக்கை இடைவெளியில் **இந்த ஆய்வின் தேசிய மதிப்பீடுகள் செய்யப்பட்டு உள்ளன**. இதற்கு மேலதிகமாக, 13 மாவட்டங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்டோருடன், முக்கிய தகவல்களை வழங்கக்கூடியவர்களுடனான நேர்காணல்கள், குழுக் கலந்துரையாடல்கள், விரிவான நேர்காணல்கள் மற்றும் அமைப்பியல் ரீதியான கண்காணிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியவாறு ஒரு தரமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கனடாவின் ஒட்டாவாவில் உள்ள சர்வதேச அபிவிருத்தி ஆய்வு நிலையத்தின் உதவித்திட்டத்தின் கீழ் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

## LIRNEasia பற்றிய விளக்கம்

ஆசிய பசுபிக் வலயம் முழுவதும் செயற்படும் ஒரு கொள்கை ரீதியான சிந்தனைக் குழுவே LIRNEasia ஆகும். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஆய்வு மூலம் கொள்கை மாற்றத்தை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.


**மேலதிக தகவல்களுக்கு -** கயனி **ஹுருல்லே** (சிரேஷ்ட ஆய்வு முகாமையாளர், LIRNEasia) gayani@lirneasia.net அல்லது (+94) 77 333 9727.

ஊடக அறிக்கை 3: அஸ்வெசும நலன்புரித்திட்ட பதிவு

# ‘அஸ்வெசும’, சமுர்த்தியை விட ஒருபடி மேலான நலன்புரி திட்டம், ஆனால் புதிய பயனாளர்களுக்கான தகவல் தொடர்பினை மேம்படுத்த முடியும்.

(கொழும்பு, 7 ஜூன் 2023)

LIRNEasia என்ற பிராந்திய சிந்தனைக் குழு முன்னெடுத்த தேசிய அளவிலானகணக்கெடுப்பில்,இலங்கையில் 7 மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாக, குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 2 மில்லியன் குடும்பங்கள் மற்றும் 1.6 மில்லியன் வீடுகள் உள்ளடங்குகின்றன. தற்போது காணப்படும் சமூகநலத் திட்டங்கள், சமூகத்தில் வறுமை நிலையிலுள்ளவர்களை சென்றடைவதில் தோல்வியடைந்துள்ளது.. வறுமையில் அடிமட்டத்தில் வாழும் கடைசி பத்து வீதமாக வீடுகளில் வெறும் 31% வீடுகளே சமுர்த்தி நல திட்டத்தை பெறும் அதேவேளை முதல் பத்து வீதமான வசதி படைத்த பணக்கார வீடுகளிலும் கூட 4% ஆன மக்கள் சமுர்த்தி நல திட்டத்தை பெறுகிறார்கள்




கடினமான வறுமை நிலையினை எதிர்நோக்குபவர்களுக்கு உதவும் வகையில், “அஸ்வெசும“ என்ற புதிய திட்டத்தினை, நலன்புரி நலன்கள் சபை ஆனது அறிமுகப்படுத்துகின்றது. இந்தத் திட்டத்தினூடாக நலன்களை

பெற்றுக்கொள்வதற்காக பயனாளிகளை பதிவுசெய்யுமாறு கடந்த வருடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமைக்கு அமைவாக, 3.7 மில்லியன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. "அஸ்வெசும" திட்டம் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்கு அரசாங்கம் முயன்ற போதிலும், குறித்த நன்மைகளை பெற்றுக்கொள்ளவேண்டிய தேவையுள்ளவர்களில், அனைவரும் இத்திட்டத்திற்கு பதிவுசெய்திருக்க மாட்டார்கள் என LIRNEasiaவின் ஆய்வு இனங்காட்டுகின்றது. .

முதலாவதாக, பலதரப்பட்ட தகவல்தொடர்பு மற்றும் பரிமாற்ற உத்திகள் காணப்படுகின்ற போதிலும், இதுபோன்ற திட்டங்களைப் பற்றிய தகவல்களை தங்களுக்கு அறியப்படுத்துவதற்கும் , விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளவும், பலர் அரசாங்க அதிகாரிகளையே சார்ந்துள்ளனர். பின்னர் **அவர்கள்** படிவங்களை சுயமாக நிரப்பிக் கொள்வார்கள்.. நலத்திட்டத்தில் பயன்பெறக்கூடிய சாத்தியமுள்ளவர்களுக்கு, விண்ணப்பங்களை சில சந்தர்ப்பங்களில் அரசாங்க அதிகாரிகளே விண்ணப்பதாரர் சார்பாக பூர்த்திசெய்கின்றனர். அரச அதிகாரிகளுடன் சுமுகமான நட்புடன் உள்ளவர்கள் அஸ்வெசும திட்டத்தில் பதிவுசெய்துள்ள போதும், போதியளவு சமூகத்துடனான தொடர்பாடலில் இல்லாதவர்களிற்கு இத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வோ அல்லது அதற்கு எவ்வாறு விண்ணப்பிப்பதென்ற தெளிவோ இல்லை.

இரண்டாவதாக, இத்திட்டத்தில் பதிவுசெய்வதற்கும் நலன்களை பெற்றுக்கொள்வதற்குமான தகைமைகள் பற்றிய உண்மைக்கு புறம்பான தகவல்கள் பரப்பப்பட்டமை இத்திட்டத்திற்கு சிலர் பதிவுசெய்யாமல் இருந்தமைக்கு காரணமாக அமைந்துள்ளது. சாந்தி (கற்பனைப் பெயர்), எனும் அவிசாவளையை சேர்ந்த பெருந்தோட்ட தொழிலாளி கூறியது யாதெனில், "சில விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படுவதாகவும், அதனை 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து கிராமசேவகரிடம் கையளிக்க வேண்டும் என்றும் கேள்விப்பட்டேன் ; எனினும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அதற்கு தகுதியற்றவர்கள் என பேசப்பட்டமையால் நான் பதிவுசெய்யவில்லை".

மூன்றாவதாக, கடந்த சில வருடங்களில் ஏனைய நலத்திட்டங்களிற்கு விண்ணப்பித்து நலன்களை பெற்றுக்கொள்ள தேர்வுசெய்யப்படாதவர்கள் இக்குறித்த திட்டத்திற்கும் விண்ணப்பிக்க முன்வரவில்லை. ஏனெனில் தங்கள் முயற்சி எவ்வாறெனினும் வீண் போய்விடும் என்ற மனநிலையினை அவர்கள் கொண்டுள்ளனர்.

இந்த ஆய்வின் முடிவுகள் LIRNEasiaவின் ஏற்பாட்டில் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் பகிர்ந்துகொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ ஷெஹான் சேமசிங்க பிரதான உரையை நிகழ்த்தினார். திரு. B. விஜயரத்ன (தலைவர், நலன்புரி நலன்கள் சபை), கரின் பெர்னாண்டோ (குழுத் தலைவர் - நிலையான அபிவிருத்தி, CEPA), கயனி **ஹுருல்லே** (சிரேஷ்ட ஆய்வு முகாமையாளர், LIRNEasia), மற்றும் தாரக அமரசிங்க (புள்ளிவிபர நிபுணர், LIRNEasia) ஆகியோரின் பங்குபற்றுதலுடன் குழுக்

கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனை தனநாத் பெர்னாண்டோ (CEO, Advocata Institute) நெறிப்படுத்தினார்.

“சமூக பாதுகாப்பு திட்டங்களை சீர்திருத்துவதற்கான சிறப்பான முயற்சியாக அஸ்வெசும திட்டம் காணப்படுகின்றது. கட்டமைக்கப்பட்டுள்ள அமைப்பில் காணப்படுகின்ற சரிபார்ப்பு மற்றும் சமநிலைத்தன்மையானது அரசாங்கத்தை, தேவையுள்ளவர்களுக்கு முதலுரிமை வழங்குவதற்கு அனுமதிக்கின்றது. . அரசாங்கத்திடம் மட்டுப்படுத்தப்பட்ட நிதி காணப்படும் சந்தர்ப்பங்களில் இவ் கட்டமைப்பு அவசியமாகின்றது. எவ்வாறாயினும், கடினமான வறுமையை எதிர்நோக்குபவர்களிலும் இன்னும் சிலர் இத்திட்டத்திற்கு பதிசெய்யவில்லை என்பதனை நாம் விளங்கிக்கொண்டுள்ளோம். இத்திட்டத்தில் பதிவுசெய்வதற்கான நடைமுறையை அரசாங்கம் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். தங்கள் தொடர்பாடல் வட்டாரத்தையும் தாண்டி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அதிகாரிகளை ஊக்குவிக்க மேலதிக முயற்சிகளை மேற்கொள்ளல், இத்திட்டம் தொடர்பான தவறான தகவல்கள் பரப்பப்படுவதை கட்டுப்படுத்தல் மற்றும் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துதல்வேண்டும்” என LIRNEasiaவைச் சேர்ந்த இசுறு சமரதுங்க தனது கருத்தை வெளிப்படுத்தினார்.

## ஆய்வு பற்றிய விளக்கம்

10,000இற்கும் மேற்பட்ட இலங்கை குடும்பங்களின் **தேசிய ரீதியாக பிரதிநிதித்துவ படுத்த கூடிய மாதிரியை** அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, 400 கிராமசேவகர் பிரிவுகளில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. +/-1.4% என்ற அளவிலேயே பிழை ஏற்படலாம் என்ற 95 வீத நம்பிக்கை இடைவெளியில் **இந்த ஆய்வின் தேசிய மதிப்பீடுகள் செய்யப்பட்டு உள்ளன**. இதற்கு மேலதிகமாக, 13 மாவட்டங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்டோருடன், முக்கிய தகவல்களை வழங்கக்கூடியவர்களுடனான நேர்காணல்கள், குழுக் கலந்துரையாடல்கள், விரிவான நேர்காணல்கள் மற்றும் அமைப்பியல் ரீதியான கண்காணிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியவாறு ஒரு தரமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கனடாவின் ஒட்டாவாவில் உள்ள சர்வதேச அபிவிருத்தி ஆய்வு நிலையத்தின் உதவித்திட்டத்தின் கீழ் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

## LIRNEasia பற்றிய விளக்கம்

ஆசிய பசுபிக் வலயம் முழுவதும் செயற்படும் ஒரு கொள்கை ரீதியான சிந்தனைக் குழுவே LIRNEasia ஆகும். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஆய்வு மூலம் கொள்கை மாற்றத்தை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

**மேலதிக தகவல்களுக்கு** - கயனி **ஹுருல்லே** (சிரேஷ்ட ஆய்வு முகாமையாளர், LIRNEasia) gayani@lirneasia.net அல்லது (+94) 77 333 9727.

LIRNEasia
Pro-poor. Pro-market.

ஊடக அறிக்கை 4: சமுர்த்தி பரிவர்த்தனை செலவுகள்

# சீராக கட்டமைக்கப்பட்ட வங்கிகள் ஊடாகவே நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் – LIRNEasia

(கொழும்பு, 7 ஜூன் 2023)

சமுர்த்தி பயனாளிகள் தமது மாதாந்த நலத்திட்டத்தை பெற்றுக்கொள்வதற்காக, ஒவ்வொரு மாதமும் சுமார் 4 மணித்தியாலங்கள் செலவிடுவதாக, பிராந்திய சிந்தனைக் குழுவான LIRNEasia முன்னெடுத்த **தேசிய ரீதியாக பிரதிநிதித்துவ படுத்த கூடிய கணக்கெடுப்பு ஆய்வில்** சுட்டிக்காட்டியுள்ளது. சிலர் நலத்திட்டத்தை பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு மாதமும் 12 மணிநேரம் வரை **நேரம்** ஒதுக்குகின்றனர்.





இந்த விநியோக செயன்முறையானது பல சவால்களைக் கொண்டுள்ளது. பொதுவாக நிச்சயமற்ற, **குறைந்த அளவிலான வெகு சில** நாட்களிலேயே மாதாந்த கொடுப்பனவு விநியோகிக்கப்படுவதால், அதனை பெற்றுக்கொள்ளும் நாட்களில் சமுர்த்தி வங்கிகளில் பாரிய நெரிசல் ஏற்படுகின்றது. தாம் அலுவலகத்தில் இருப்போம் என பயனாளிகளுக்கு அதிகாரிகள் தெரிவிக்கின்ற போதிலும், சில சந்தர்ப்பங்களில் அவர்களது வருகை நிச்சயமற்றதாகவே காணப்படுகின்றது. "பணத்தைப் பெற்றுக்கொள்ள பொதுவாக காலை 9.30 மணியிலிருந்து 10.30 மணிக்கிடையில் சமுர்த்தி வங்கிக்கு வருமாறு எமது அலுவலர் கூறுவார். ஆனால் அவர் வெவ்வேறு நேரங்களில் வருவார். பிற்பகல் 1.30 மணிக்குள் எமது செயற்பாடுகளை முடித்துக்கொள்ளவே நாம் முயற்சிக்கின்றோம். அப்போதுதான், எமது பிள்ளைகளை பாடசாலையிலிருந்து அழைத்துச்செல்ல முடியும். எனினும், பணத்தைப் பெற்றுக்கொள்ள அதிக நேரம் செலவாகின்றது. சில நாட்களில் குறிப்பிட்ட அதிகாரி சமுர்த்தி வங்கிகளில் இருக்க மாட்டார். அப்போது நாம்

வெறுங்கையுடன் வீடு திரும்ப வேண்டும்” என கொழும்பைச் சேர்ந்த 42 வயதான ரமணி (கற்பனை பெயர்) என்ற தாய் குறிப்பிட்டார்.

தமக்கான உதவித்தொகையை பெற்றுக்கொள்**ள** ஒவ்வொரு கவுண்டர்களுக்கும் **ஒன்றன் பின் ஒன்றாக** செல்லவேண்டிய நிலை காணப்படுவதாக சில பயனாளிகள் தமது அனுபவத்தினை பகிர்ந்துகொண்டனர். “கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என ஒருவர் சரிபார்க்கின்றார். வாங்கிய கடன் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளதா என இன்னொருவர் சரிபார்க்கின்றார். செலுத்தவேண்டிய நிலுவைத் தொகை ஏதேனும் உள்ளதா என மற்றொருவர் சரிபார்க்கின்றார். இவ்வாறு, அங்கு ஏராளமான கணக்கு குறிப்புகள் (லெட்ஜர்) உள்ளன” என திலங்க (கற்பனைப் பெயர்) குறிப்பிட்டார்.

வங்கிகள் ஊடாக **சமூக** நலத்திட்ட பணத்தை கையளிக்கும் நடைமுறை நோக்கி நகர்வோம் என 2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வோரில் 60 வீதமானோர், இத்தகைய கணக்குகளை அரச அல்லது தனியார் வங்கிகளில் வைத்துள்ளனர் என LIRNEasia இன் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது.

பெயரைத் தவிர, சமுர்த்தி வங்கிகள் இன்னும் மத்திய வங்கியினால் சீராக ஒழுங்கமைக்கப்படாததமையால் அது இன்னும் வங்கியாக தகுதிபெறவில்லை. எனினும், சமுர்த்தி வங்கிகளை **சீராக கட்டமைக்க** முயற்சிப்பதாக 2023ஆம் ஆண்டு மே மாதம் அரசாங்கம் சுட்டிக்காட்டியது. அத்தோடு, மத்திய வங்கியின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னர், சமுர்த்தி வங்கிகள் மற்றும் ஏற்கனவே உள்ள வங்கிகள் மூலம் பயனாளிகளுக்கு அவர்களது நலத்திட்டங்களை பெற்றுக்கொள்ளும் வழிமுறை கொண்டுவரப்படும் என குறிப்பிட்டது. சமுர்த்தி வங்கிகள் **முறையாக கட்டமைக்கப்பட்டு** வங்கி முறைமைக்குள் கொண்டு வரப்பட்டால், வங்கிக் கணக்குரிமையாளர்கள் 71 வீதமாக உயருவாரென LIRNEasiaஇன் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. நலத்திட்டங்களை பெற்றுக்கொள்வதற்கு குறைந்தளவான மக்களே புதிதாக வங்கிக் கணக்குகளை ஆரம்பிக **வேண்டிய தேவை இருக்கும்** .




“சில பயனாளிகளுக்கு அண்மித்த பகுதிகளில் தற்போதுள்ள வங்கிகள் காணப்படும். சில பயனாளிகள் வசிக்கும் பகுதிகளுக்கு **அருகிலேயே** சமுர்த்தி

வங்கிகளே காணப்படும். இவ்வாறான நிலையில், தமது நலத்திட்டத்தை இரு வழிகளிலும் பெற்றுக்கொள்வதற்கான தெரிவினை அவர்களுக்கு வழங்கும்போது, பணத்தை பெற்றுக்கொள்ள பயணிக்கும் நேரத்தை குறைக்கலாம் மற்றும் பணத்தை பெற்றுக்கொள்ளும் இடத்தில் ஏற்படும் நெரிசலை குறைக்கலாம். தானியக்க இயந்திரங்கள் ஊடாக (ஏ.டி.எம்) பணத்தை பெற்றுக்கொள்ள முடியுமாயின், செலவாகும் நேரத்தை மேலும் குறைக்கலாம். எவ்வாறாயினும், தற்போதுள்ள வங்கிகளுக்கு சாத்தியமான மாற்று முறைமையாக சமுர்த்தி வங்கியை முன்வைப்பதற்கு முன்னர், சமுர்த்தி வங்கி முறைமையில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகளை நாம் தீர்க்க வேண்டும். மனித வளங்களை வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுத்த வேண்டும், மற்றும் பயாளிகளின் அனுபவத்தை மேம்படுத்துவதற்கு வங்கியின் உள்ளக செயன்முறைகளை டிஜிட்டல் மயமாக்க வேண்டும்" என LIRNEasiaவைச் சேர்ந்த கயனி **ஹுருல்லே** குறிப்பிட்டார்.

LIRNEasiaவின் ஏற்பாட்டில் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் இந்த ஆய்வுத்தரவுகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ ஷெஹான் சேமசிங்க பிரதான உரையை நிகழ்த்தினார். திரு. பி. விஜயரத்ன (தலைவர், நலன்புரி நலன்கள் சபை), கரின் பெர்னாண்டோ (குழுத் தலைவர் - நிலையான அபிவிருத்தி, CEPA), கயானி ஹிருல்லே (சிரேஷ்ட ஆய்வு முகாமையாளர், LIRNEasia), மற்றும் தாரக அமரசிங்க (புள்ளிவிபர நிபுணர், LIRNEasia) ஆகியோரின் பங்குபற்றுதலுடன் குழுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனை தனநாத் பெர்னாண்டோ (CEO, Advocata Institute) நெறிப்படுத்தினார்.

## ஆய்வு பற்றிய விளக்கம்

10,000இற்கும் மேற்பட்ட இலங்கை குடும்பங்களின் **தேசிய ரீதியாக பிரதிநிதித்துவ படுத்த கூடிய மாதிரியை** அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, 400 கிராமசேவகர் பிரிவுகளில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. +/-1.4% என்ற அளவிலேயே பிழை ஏற்படலாம் என்ற 95 வீத நம்பிக்கை இடைவெளியில் **இந்த ஆய்வின் தேசிய மதிப்பீடுகள் செய்யப்பட்டு உள்ளன**. இதற்கு மேலதிகமாக, 13 மாவட்டங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்டோருடன், முக்கிய தகவல்களை வழங்கக்கூடியவர்களுடனான நேர்காணல்கள், குழுக் கலந்துரையாடல்கள், விரிவான நேர்காணல்கள் மற்றும் அமைப்பியல் ரீதியான கண்காணிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியவாறு ஒரு தரமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கனடாவின் ஒட்டாவாவில் உள்ள சர்வதேச அபிவிருத்தி ஆய்வு நிலையத்தின் உதவித்திட்டத்தின் கீழ் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

## LIRNEasia பற்றிய விளக்கம்

ஆசிய பசுபிக் வலயம் முழுவதும் செயற்படும் ஒரு கொள்கை ரீதியான சிந்தனைக் குழுவே LIRNEasia ஆகும். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஆய்வு மூலம் கொள்கை மாற்றத்தை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

**மேலதிக தகவல்களுக்கு -** கயனி **ஹுருல்லே** (சிரேஷ்ட ஆய்வு முகாமையாளர், LIRNEasia) gayani@lirneasia.net அல்லது (+94)773339727.